முருகப்பெருமான் துணை

**மகான் கலிய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.10.2023,** புதன்கிழமை

1. கலிகால துன்பங்கள் நீக்கிட
கந்தவேலன் சக்தியாக வந்து
அழியாமை தந்தருளும் ஞானியே
ஆறுமுக அரங்கமகா தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தரிவை திங்கள்
அறிவிக்க மூவையீர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 17 ம் நாள், 04.10.2023, புதன்கிழமை)
3. வாரமதில் கலிய நாயனார் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
வாராந்திரம் ஞானிகள் பூசை
வரமாகச் செய்துவரும் மக்களுக்கு
4. மக்களுக்கு சர்வ பாதுகாப்பாய்
மகா ஞானிகளும் இறங்கி
ஆக்கமுடன் இறங்கி அருள்வர்
அறிவுத் தெளிவு திடம் கூட்டி
5. கூட்டியே உண்மைபட வாழ
குருமார்க்கம் அவசியமென
காட்டியே வழிநடத்தி நன்கு
கலியினில் துணைபட வருவர்
6. வருகவே மும்மலக் குற்றம்
வாழ்வினில் தொடராதபடி
குருவருளும் துணை நிற்க
குறையிலா ஞானவான்கள் ஆவர்

7. அவனியில் அரங்கன் காட்டும்
ஆற்றல்மிக்க தருமப் பாதை
அவசியம் அறிந்து தொடர்ந்து
அன்னதானம் செய்து வர
8. வருகவே அரங்கன் தேடும்
வரம்பெற்ற மக்களாக
முருகப் பெருமான் அருளியே
முழுமை பெற்ற ஞானிகளாக
9. ஆகவே தேற்றம் கண்டு
அகிலத்தை மாற்றவல்ல
மகான்களாக நிலை கூடி
மறுமை மரணமும் வெல்வர்
10. வெல்வர் மாயை சோடைகளை
வெல்வர் ஆசாபாசங்களை
வெல்வர் பொறிபுலன்களை
வீழ்த்தியே சகலவகை தேறி
11. தேறியே ஞானவாழ்வு கொண்டு
தேசமெங்கும் ஞானத் தலைமை
மாறிட வழிவகை செய்வர்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—